உ

குகமயம்.

# கந்தர்கவசம்.

இஃது,

மதுரைத்தமிழ்ச்சங்கவித்வான்

வண்ணக்களஞ்சியம்

காஞ்சி

## நாகலிங்கமுதலியார்

அனுமதியின்படி

சென்னை:

பி. எ. ஜம்புலிங்க செட்டியால்

பதிப்பிக்கப்பட்டது.

ஆறம்பதிப்பு.

1906.

# செந்தமிழ்ப்புத்தகசாலை.

நெ. 13. நயினியப்பநாயக்கன் வீதி,
பிரோரியலால் - சென்னை.

இப்புத்தகசாலையில் சைவசம்பிரதாய சாஸ்திரங்கள், வைஷ்ணவ சம்பிரதாய சாஸ்திரங்கள், சோதிஷ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள், புராணேதிகாசங்கள், இலக்கண இலக்கியங்கள், இஸ்கூல் புஸ்தகங்கள், காப்பி புஸ்தகங்கள், கையேட்டுப் பேரோட்டுப் புஸ்தகங்கள், பலவித பஞ்சாங்கங்கள், டைரிகள், றப்பர் ஸ்டாம்புகள் முதலியவை கிடைக்கும். வெளியூரார் வி. பி. தபால் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

பி. எ. ஜம்புலிங்க செட்டி.

உ

குகமயம்.

# கந்தர்கவசம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச | ர | ஹ | ண | ப | வ |
| ர | ஹ | ண | ப | வ | ச |
| ஹ | ண | ப | வ | ச | ர |
| ண | ப | வ | ச | ர | ஹ |
| ப | வ | ச | ர | ஹ | ண |
| வ | ச | ர | ஹ | ண | ப |

காஞ்சி. நாகலிங்கமுதலியார்.
பதிப்பு.

## நூன்மாட்சி.

நினைவா னிருவினைபோ நெஞ்சினின் வாயோதக்
கனிவாய்ப் பலநலமுங் காட்டுந்—தனைநாடி
வந்தனைசெய் வோர்க்கு வரமுதவுஞ் செங்கதிர்வேற்
கந்தர்கவ சங்கூறுங் கால்.

உ

சிவமயம்.

முருகக்கடவுடுணை.

# கந்தர் கவசம்.

## காப்பு.

அமரர் துயர்தீர வன்று பொருத
குமரனடிப் போதிணையே கூறு.

## ஆசிரியப்பா.

சரஹண பவகுக
சண்முக முருக
சுரமக டழுவிய
சுந்தர முருக

கருக்குழி தனில்விழார்
கண்டு மகிழத்
திருப்பரங் குன்றிற்
றிகழ்ந்தருண் முருக
மந்திர முனிவோர்
வந்து வழிபடச்
செந்தி னகரிற்
சேர்ந்தருண் முருக
காவியுந் தண்டுங்
கண்டோர் பரவ
ஆவினன் குடியி
லடைந்தருண் முருக
நீரகத் தோர்க
ணித்த லுந் தொழுதெழ
ஏரக வெற்பி
லெழுந்தருண் முருக
வந்த மாதவர்
வகைவகை துதிசெயக்

கந்தமா தனத்திற்
கலந்தருண் முருக
அயிலைப் பொருவிழி
யரம்பைகள் பரவக்
கயிலைச் சிலம்பிற்
கமழ்ந்தருண் முருக
கருமலை பொடிபடக்
கண்டவர் சூழத்
திருமலை யதனிற்
சிறந்தருண் முருக
வேங்கை யுடைவனை
வேதியர் துதிக்க
வேங்கட கிரிவயின்
விளைந்தருண் முருக
பணியணி பரசிவன்
பழமறைப் பொருள்பெறத்
தணிகையங் குவட்டிற்
றழைத்தருண் முருக

நள்ளிரு டன்னி
ஞச்சியார் நலமுற
வள்ளி மலையில்
வாழ்ந்தருண் முருக
கன்றுல் விளவெறி
கண்ணன் சிவமுறக்
குன்றத் தூரிற்
குளிர்ந்தருண் முருக
இழுக்கண் டாத்தவ
ரிருந்தரு ளணிபெறக்
கழுக்குன் றிடத்திற்
கனிந்தருண் முருக
சூறை யாம்புலன்
சுழல்வழிப் படார்தொழப்
பேறை மலையிற்
பீடருண் முருக
குயிலா மெனுமொழிக்
குஞ்சரி மகிழ்வுற

மயிலா சலத்தில்
மகிழ்ந்தருண் முருக
துரிசுறுத் தவர்பலர்
தூநல மடைவான்
திரிசிரா மலேயிற்
றிகழ்ந்தருண் முருக
பொற்புரி யவர்நலம்
பொருந்திப் பிழைக்கக்
கற்குடி யகத்திற்
கவின்பெறு முருக
சிரத்தை யுடன்பணி
சீரியோ ரழகுற
இரத்தின கிரியி
லிருந்தருண் முருக
இராத விடையவ
ரிருபுற மருவ
விராலி மலேயில்
விளைந்தருண் முருக

அநாதி யாகிய
வமலன் றுதிசெய
விநாயக மலையில்
விருப்பருண் முருக
கொங்கோ டலர்தொடு
குரவ ரணிபெறச்
செங்கோ டதனிற்
சேர்ந்தருண் முருக
கல்வி விழைகுநர்
கலந்து வழிபடக்
கொல்லி மலையிற்
குழைந்தருண் முருக
ஏன மாகிய
விறையவன் பதம்பெற
ஞான மலையி
னயந்தருண் முருக
ஒப்புயர் வில்லா
வொருவ னருளுறச்

செப்பு வெற்பிற்
　　செழித்தருண் முருக
இருடிக டவவினை
　　யிளைப்புறு வண்ணங்
குருடி மலையிற்
　　குறித்தருண் முருக
எங்குள பொருளு
　　மேற்பவர் பெற்றுயக்
கொங்கண கிரியிற்
　　கூர்ந்தருண் முருக
இடுங்குணம் பெரிதே
　　யிறைமக னுயிர்பெறக்
கொடுங்குன் றதனிற்
　　குனித்தருண் முருக
பன்றிக் கன்றருள்
　　பரன்பிர ணவம்பெறக்
குன்றக் குடியிற்
　　கொடுத்தருண் முருக

வசுக்கள் வழிபுற
வந்து பராவிடப்
பசுமலை யிடத்திற்
பதிந்தருண் முருக
நதியணி யரனிகர்
நற்றமிழ் முனிபெறப்
பொதிகை மலையிற்
புகழ்ந்தருண் முருக
அழகிய பாண்டிய
னடியிணை பெற்றுயக்
கழுகு மலையிற்
கவிந்தருண் முருக
துள்ளிய வினையிற்
றொடக்குறுர் பரவ
வள்ளி யூரில்
வதிந்தருண் முருக
எதிரறு தவத்தோ
ரிடருறு வண்ணங்

கதிர்கா மத்திற்
கசிந்தருண் முருக
கழைமலர் பிடிமதன்
கவின்பெறப் போற்றப்
பழமுதிர் சோலைபிற்
பதிந்தருண் முருக
வருக முருக
வருக முருக
கருணை யுடனே
கண்ணெதிர் நன்கு
ஆறு முகமு
மழகிய முடியும்
நீறு புனைந்த
நிகரறு நெற்றியும்
புகலுறு புருவமும்
புனைந்த சுட்டியும்
மகர குண்டல
மாட்டிய செவியும்

கண்டிகை பூண்ட
கவின்பெறு களமும்
விண்டிகை மதிக்க
விளங்குறு மார்பும்
பன்னிரு தோளும்
பவள வாயும்
கன்னிய ரிருவர்
கலந்த கோலமும்
அபய வரதமு
மயிலு மயிலுஞ்
சுபமருள் பங்கய
சுந்தர வடியும்
கோழிக் கொடியுங்
கூர்நவ வீரரும்
வாழி மொழிபகர்
வானவர் குழுவும்
தோற்ற வடிமைமுன்
சொகுசுடன் வந்து

மாற்றூர் தம்மை
வதைத்தருண் முருக
ஓம்வசிய வசிய
ஓங்கார முருக
ஸ்ரீம்ஹ்ரீங் சிவசிவ
ஸ்ரீங்கார முருக
சம்சிங் சரஹண
பவவோம் முருக
ரம்ரங் ரஹணப
வசஐயும் முருக
ஹம்உங் ஹணபவ
சரக்லீயும் முருக
ணம்ணங் ணபவச
ரஹசௌவும் முருக
பம்பங் பவசர
ஹணஹ்ரீயும் முருக
வம்வங் வசரஹ
ணபஸ்ரீயும் முருக

சிவசிவ சிவசிவ
சிவாய நமஹ
சங்கர சங்கர
சயிலொளி பவாய
ஓம்திரி புரபவ
ஓம்கிக மொளிபவ
ஓம்பரி புரபவ
ஓம்பவ ஞொளிபவ
ஓம்குரு பரபவ
ஓம்குக ஞொளிபவ
ஓம்சிவ கரபவ
ஓம்சிகா ராகம
ஓம்ஆம் க்ரீயும்
ஓம்க்லீம் ஐயும்
ஆம்ஓம் அவ்வும்
அம்சிவா யநம
ஊம்ஆம் க்லீயும்
சவ்க்ரீயு ம்ரீயும்

ஓம்ரீயும் க்ரீயும்
சவ்க்ரீ ஐயும்
ஆன முருக
வழகிய முருக
வான முருக
வரமருண் முருக
அல்லலாந் தொழிலை
யகற்றிடு முருக
பில்லி சூனியம்
பெயர்த்தெறி முருக
கட்டமாம் வினையைக்
களைந்தெறி முருக
குட்டிமோ கினியைக்
குலைத்திடு முருக
கறுப்பனை வீரனைக்
களைந்திடு முருக
குறிபகர் மாடனைக்
கொளுத்திடு முருக

இடாகினி தன்னை
விழுத்தெறி முருக
அடாத குறளியை
யடக்கிடு முருக
கொள்ளிவாய்ப் பேயைக்
குலைத்திடு முருக
நள்ளிருண் முனியை
நசித்திடு முருக
துஷ்டதே வதையைத்
துரத்திடு முருக
அஷ்டமா சித்தியை
யருள்செய முருக
தலைவலி யதனைத்
தவிர்த்திடு முருக
கலைவலி யதனைக்
கவித்திடு முருக
மூல மதனை
முறித்திடு முருக

சூலை யதனைச்
சுழற்றிடு முருக
கண்ணோ யதனை
களைந்திடு முருக
மண்ணோ யதனை
மறித்திடு முருக
குன்ம மதனைக்
குலைத்திடு முருக
சென்ம வினையைத்
திருப்பிடு முருக
ஏறிய விஷத்தை
யிறக்கிடு முருக
சீறிய மாவைச்
சிதைத்திடு முருக
பூக்கமழ் குஞ்சிமுற்
புகலு முறுப்பைக்
காக்க முருக
காக்க முருக

வாழி முருக
வாழி முருக
வாழி முருக
வாழி முருக
முருக முருக
முருக முருக
முருக முருக
முருக முருகனே.

கந்தர்கவசம் முற்றியது.

---

திருப்புகழ்க்காரன்றிருவடிவாழ்க.

வேலுமயிலுந்துணே.

M. V. NAIDU & Co., PRINTERS, MADRAS.

"எக்ஸ்"

# தந்தஸஞ்சீவி.

---

இந்த "பல்பொடி"யால் பல்லில் ஈறுகட்டுதல், சிலுசிலுர்த்தல், கூசுதல், வீங்குதல், குத்துதல், நாவில் மாப்படிதல், வாய்நாறுதல், இரத்தம் வருதல் முதலிய எல்லா தோஷங்களும் நீங்கி பற்கள் உறுதிப்படும். டப்பி 1 - க்கு அணு - 2.

---

பலவிதமான கலர்பான்சி "போஸ்டு கார்டுகள்" நூறு அடங்கிய கட்டு 1 - க்கு அணு - 2.

வார்டு அண்டு கம்பேனி,
மருந்துசாலை - குஜிலி வீதி,
சென்னை.



# மூக்குக்கண்ணாடி.

வெள்ளெழுத்துவந்த கண்களுக்கும், தூரத்ருஷ்டி சமீபத்ருஷ்டி இழந்த கண்களுக்கும், தூசுதாங்கா கண்களுக்கும், வயதுக்கும் சரீரவலிவுக்கும் ஏற்றபலவித ஸ்படிகம் முதலான கண்ணாடிகள் எங்களிடம் சுலபமான விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். வேண்டியவர்கள் கண்ணாடிகள் எத்தனைநாளாகப் போடுவதும் அல்லது புதிதாய்ப்போடுவதும் விவரமாகவும் தெளிவாகவும் தெரிவிக்கவேண்டும்.

வார்டு அண்டு கம்பெனி,
குஜிலிவீதி - சென்னை.